
120

# மிருதங்க அரங்கேற்றம்



## செல்வன் தி.அரன்றாஜ்

**02.03.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் ஆசிச்செய்தி

மாதா. பிதா. குரு. தெய்வப் பாதம் பணிந்து இன்று அளவையூரில் செல்வன் தி.அரன்றாஜ் அரங்கேற்றம் காண்கிறார் என்றால் அப்பெருமை எனது குருநாதர் கலாபூஷணம்திரு.க.ப.சின்னராசா அவர்களையே சாரும். பேரோசான் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களின் கலைவழித்தோன்றலில் ஒரு தூய்மையான கலைஞனாக எல்லோராலும் மதிக்கப்படுபவர் எனது குருநாதர் ஆவர். அவரை எனது குருவாகப் பெற்றது நான் செய்த பூர்வ புண்ணியப்பலன் என்றே எண்ணுகின்றேன். அவரிடம் நான் கற்றுக்கொண்ட துறைசார்ந்த ஆற்றலே இன்றைய நிகழ்வு.


ஈழத்தில் இருந்து இந்தியாவிற்கு சவால் விடுத்த பெருங்கலைஞர்களை வளர்த்தெடுத்த புண்ணிய பூமியாம் அளவையூரில் கலையுணர்வு மிக்கவர்கள் திரு.திருமதி தில்லைநாதன் தம்பதியினர். இவர்களின் தலைமகன் செல்வன் தி.அரன்றாஜ் யா/ மகாஜனக் கல்லூரியில் உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் கற்று வருகின்றார். கல்வியைப் போன்றே கலையிலும் வட இலங்கை சங்கீதசபையில் மிருதங்கத்துறையில் ஐந்தாம் தரத்தில் விசேட சித்தி பெற்று ஆசிரியர் தரத்தைக் கற்றுக் கொண்டிருக்கின்றார்.

இன்றைய நவநாகரிக மேலைத்தேய மோகங்களுக்குள் சிக்கி இனத்துவ அடையாளங்கள், பண்பாடுகள், கலை, கலாச்சார விழுமியங்களைத் தொலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளைஞர் சமூகத்தில் மாதா, பிதா, குரு, தெய்வபக்தி கொண்ட சமூகத்திற்கு ஏற்புடைய பண்புடைய மாணவன் அரன்றாஜ் என்பது எனது இதய சுத்தியான கருத்து. திரு.திருமதி தில்லைநாதன் தம்பதியினர் தமது தலைமகனை ஒரு கலைமகனாக்கிக் காண வேண்டும் என்று ஆசை கொண்டு அதற்காக உழைத்தவர்கள். இன்று அவர்களுடைய உள்ளம் நிச்சயம் மகிழ்ச்சி அடையும்.

அரன்றாஜ் அவர்கள் தனது மிருதங்க ஆரம்பக் கலையை வவுனியாவில் ஆசிரியர் திரு.சோ.சுந்தரேஸ்வரனிடம் பயின்று அதன் பின்பு ஆசிரியர் திரு.ந.மாதவன் (எம்.பில்) அவர்களிடம் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இன்றைய அரங்கு மாணவனின் வளர்ச்சிப் பாதையில் அவர்கள் இருவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

அரங்கேற்றம் என்பது ஓர் அறிமுக விழா. தான் கற்ற நல்ல வித்தையினை அதன் பால் கிரகிக்கப் பெற்ற அனுபவங்களை ஒருமித்த கலைஞர்கள் சான்றோர்கள் முன் அறிமுகப்படுத்தும் நிகழ்வாகும். அரங்கேற்றம் காணும் அரன்றாஜ் இயல்பாகவே கலைஞானம் உடையவர். இந்த வகையில் கலைத்தேடல் உடையவராய் நிறைவான கலைஞானம் பெற்று கலையுலகில் ஈடில்லா பல சாதனைகள் ஆற்றி பெற்றோருக்கும், அளவையூருக்கும் புகழ் சேர்க்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சியும், குருநாதரைப் பணிந்தும் பூரண ஆசிகளை வழங்கி மகிழ்கிறேன்.

\- சுபம் -



**சிங்கராசா செந்தூரன்**
ஆசிரியர்,
யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகொல்லை விநாயகர் ஆலய பிரதமகுருவின் ஆசியுரை

எல்லாம் வல்ல அழகொல்லை பிள்ளையாரின் திருவருள் துணையோடு க.தில்லைநாதன் ஜெயவாணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரன் தி.அரன்றாஜ் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் யாழ்ப்பாணம் அளவெட்டியில் கலைத்துறையும், இசைத்துறையும், நாட்டியத்துறையும், கல்வித்துறையும் சிறந்து பரந்து விளங்கும் அளவெட்டியில் அழகொல்லை விநாயகரின் கோபுர நிழலிலே அரங்கேறும் மிருதங்க அரங்கேற்றம் "ஆல போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி" சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி விநாயகனின் திருவருளும் எனது குருவருளும் கிடைக்க ஆசிகூறி ஆசீர்வதிக்கிறேன்.

**சு.இரத்தின மகாலிங்கக் குருக்கள்**



# அளவெட்டி கும்பழாவளை விநாயகர் தேவஸ்தான பிரதம குருவின் ஆசியுரை

"தென்றல் வடிவுஞ் சிவனார் திருவடிவு
மன்றல் வடிவு மதனவடிவுங் - குன்றாத
வேயினிசை வடிவும் வேத வடிவுங்காண
லாயின் தாளங் காணலாம்"

என்று ஆன்றோர் மொழிந்த வண்ணமே.

இறைவனின் ஆனந்தத் தாண்டவ ஆடலின் போது நந்தியெம் பெருமான் மிருதங்க வாத்தியத்தை வாசித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. கர்நாடக சங்கீதக் கலைநிகழ்ச்சிகளிலே இன்றியமையாத லய வாத்தியக் கருவியாகப் போற்றப்படும் மிருதங்க வாத்தியத்தைப் பிரதானமான பக்கவாத்தியமாகக் கொள்வர்.

அறிவுக்கும் செவிக்கும் விருந்தாய் அமையும் இசைத்தமிழை வளர்க்கும் அருட்பதியாகிய அளவெட்டி வாழ் விநாயகரடியார் தில்லைநாதன் ஜெயவாணி தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் அரன்றாஜ் அளவைக் கலைவானின் இளந்தாரகையாக இப்பொன்னான பொழுதினிலே மிருதங்க அரங்கேற்றத்தை நிகழ்த்தித் தன் கலைப்பயணத்தை தெய்வ ஆசியோடும் குரு ஆசியோடும் பெற்றோரின் ஆசியோடும் ஆரம்பிக்கின்றார். இவரது லய ஞானத்தினாலே வருங்காலத்தில் எல்லா பேறுகளும் சிறப்புகளும் கும்பழாவளையானின் திருவருளால் சித்திக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சி ஆசீர்வதிக்கின்றேன்.

இவருக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்த கலையார்வமிக்க பெற்றோருக்கும் மிகுந்த சிரத்தையுடன் முறையாகப் பயிற்றுவித்த தண்ணுமைக் கலாவித்தகர் திரு.சி.செந்தூரன் ஆசிரியர் அவர்களுக்கும் உளமாரப் பாராட்டுக்களை நல்கி இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்

**சிவஸ்ரீ சோம.குமாரதாஸக்குருக்கள்**

கும்பழாவளை தேவஸ்தானம்,
அளவெட்டி.
30.01.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "மிருதங்க இசை – அறிமுக அரங்கு விழா"
## ஆசிகளும் – ஆர்வப்படுத்தலும்

எனது வணக்கத்திற்குரியவரும், மதிப்பிற்குரியவருமாகிய பேராசான் உயர்திரு ஏ.எஸ்.ராமநாதன் (மிருதங்க பேராசிரியர், மிருதங்க, சங்கீதபூஷணம் ) அவர்கள் இலங்கையில் குறிப்பாக யாழ்நகரில் மிருதங்க கலையான ஒரு "ஞீலி" யை நாட்டியதன் பலனாக அது மிருதங்க ஆசிரியப் பரம்பரையாக, இங்கு மட்டுமன்றி வெளிநாடுகளிலும் அடிபரப்பி வளர்ச்சியடைந்து வருவது கண்கூடாகும். குருபக்தி நிறைந்த எனது எல்லா மாணவர்களும் தொழில் ரீதியாகவும் மிருதங்கக் கலையை வளர்ப்பதிலும், இங்கும் வெளிநாடுகளிலும் மிகவும் மதிப்பாகவும், சிறப்பாகவும், ஆர்வமாகவும் பணியாற்றி வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

என்னிடம் மிருதங்கம் பயின்ற மாணவர்களில் ஒருவரும், சென்பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியரும், மிருதங்கம், முகர்சிங், நாடகம், சித்திரம் போன்ற கலைத்துறைகளில் பயிற்சி பெற்றவரும் மிருதங்க கலாவித்தகர், சித்திமும் வடிவமைப்பும் (நுண்கலைமானி) பட்டங்கள், பாராட்டுக்கள் பெற்றவரும் இக்கலைகளை எல்லாம் ஆர்வமுடன் வளர்த்துவரும் ஆசானுமாகிய திரு.சிங்கராசா செந்தூரன் அவர்களது முதல் மாணவன் செல்வன் தி.அரன்றாஜ் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் 02.03.2013 அன்று நடைபெற இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய அரங்கு மாணவன் செல்வன் தி.அரன்றாஜ் ஆரம்பத்தில் ஆசிரியர் திரு.சோ.சுந்தரேஸ்வரன் அவர்களிடம் மிருதங்கக் கலையை பயின்று பின்னர் ஆசிரியர் திரு.ந. மாதவன் (எம்.பில்) அவர்களிடம் பயின்று அதன்பின்னர் திரு.செந்தூரன் அவர்கள் இம் மாணவனின் பயிற்சியினைப் பூரணப்படுத்தி இன்று அரங்கேறும் நிலைக்குத் தயார் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

திரு.திருமதி தில்லைநாதன் ஜெயவாணி அவர்களின் அன்புப் புதல்வன் செல்வன் அரன்றாஜ் அவர்கள் வ.இ.ச.சபையின் தரம் 5ம் ஆண்டு சித்தி பெற்றுள்ளார் ( விசேட சித்தி), கல்லூரிப் படிப்பிலும் க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாதா, பிதா, குரு, தெய்வ பக்தி நிறைந்த இம் மாணவனின் பெற்றோரின் அயரா முயற்சிகளாலும், ஆசிரியரின் நெறிப்படுத்தலினாலும் இம் மாணவன் அரங்கேறும் நிலையை எய்தியுள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும். இவர் இத்துறையில் மேலும் வளர்ச்சியுற்றுப் பெற்றோருக்கும், குருநாதருக்கும், தாயகத்திற்கும் நற்புகழீட்டித் தர வேண்டுகின்றேன்.

இறைவனை வேண்டியும் எனது குருநாதனைப் பணிந்தும் செல்வன் இக்கலையில் மேலும் மேலும் வளர வேண்டி எனது ஆசிகளையும், பாராட்டுக்களையும் வழங்குகின்றேன்.

- நன்றி -

**கலாபூஷணம் க.ப. சின்னராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிருதங்க இசை அரங்கேற்றம்

தில்லைநாதன் ஜெயவாணி தம்பதிகளின் அருந்தவப்புதல்வன் அரன்றாஜ் தான் கற்ற மிருதங்கக் இசையை அரங்கேற்றம் செய்யவுள்ளார். இவர் என்னிடம் வாய்ப்பாட்டு இசையைப் பயின்றுள்ளார். இவருடைய அம்மம்மா ஆகிய குஞ்சு ஆசிரியர் கலைகளில் உள்ள நாட்டத்தின் காரணமாக இவர் மிருதங்கம் இன்று அரங்கேற்றம் செய்வதையறிந்து மிகவும் மகிழ்வடைகின்றேன்.

இவர் மாதவன் என்பவரிடம் மிருதங்கத்தினை ஆரம்பித்து பின் அவர் மேற்படிப்புக்காக இந்தியா சென்ற வேளை கலாவித்தகர் செந்தூரன் என்பவரிடம் மிருதங்கத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார். செந்தூரன் எனது கச்சேரிக்கு மிருதங்க இசை. மோர்சிங் இசை வாசித்து எனதும். ஏனையோரதும் பாராட்டுக்களைப் பெற்றவராவார். மாணவர்களை உருவாக்குவவதில் துடிப்பான ஆசிரியரான இவரிடம் மிருதங்க இசை பயின்றதால் நல்ல பெயரோடும். புகழோடும் இருப்பாரென்பது திண்ணம். இவர் மிருதங்க அரங்கேற்றம் செய்யும் போது இசையை கற்கத் தொடங்குகின்றார் என்பது தான் உண்மை. மிருதங்க இசையை மென்மேலும் பயின்று முன்னேற எனது நல்லாசிகளையும். கும்பளாவளைப் பிள்ளையார் அருளையும் வேண்டி சகல செல்வங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

வ.க.நடராசா
(சங்கீதபூஷணம், கலாபூஷணம்,
கலாகேசரி, தேனிசைவாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.திருமதி தில்லைநாதன் ஜெயவாணி தம்பதிகளின் தலைமகனும்
கலாவித்தகர் சிங்கராசா செந்தூரன் அவர்களின் கலைமகனுமான

செல்வன் **தில்லைநாதன் அரன்ராஜ்**
அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

அரங்கின் தலைவர்
**கலாவித்தகர் சிற்றம்பலம் சிவஞானராஜா**
(ஓய்வுநிலை இசை ஆசிரியர்)

பிரதம விருந்தினர்
**கலாபூஷணம் க.ப.சின்னராசா**
(முன்னைநாள் வருகை தரு விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, இராமநாதன் நுண்கலைக் கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
**கலாபூஷணம் அளவையூர் V.K.நடராசா**
(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)

**திரு.கு.வேல்சிவானந்தன்**
(அதிபர், யா/மகாஜனக் கல்லூரி)

**திரு.நா.கேதீஸ்வரன்**
(அதிபர், யா/அருணோதயக் கல்லூரி)

# நிகழ்ச்சி விபரம்

மங்கல விளக்கேற்றல்
இறை வணக்கம் : செல்வன் தி.அட்ஷயன்
வரவேற்புரை : திரு.இ.சர்வேஸ்வரா
(உதவிப் பதிவாளர், மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்)
தலைமையுரை
ஆசியுரை : பிரம்மஸ்ரீ சு.இரத்தின மகாலிங்கக் குருக்கள்
(பிரதம குரு, அழகொல்லை விநாயகர் ஆலயம்)
: பிரம்மஸ்ரீ சோ.குமாரதாசக் குருக்கள்
(பிரதம குரு, கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம்)

குரு வணக்கம்
கலைஞர் கௌரவிப்பு
நிகழ்வுக்கு மகுடமிடும் இசையரங்கு
சிறப்பு விருந்தினர் உரை
பிரதம விருந்தினர் உரை
மதிப்பீட்டுரை : நுண்கலைமாணி சி.சிவசிவா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு கல்வி வலயம்)

நன்றியுரை : செல்வன் தி.அரன்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உருப்படிகள் | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|
| நின்னு கோரி | மோகனம் | ஆதி | ஸ்ரீநிவாசஐயங்கார் |
| வாரண முகனே | நாட்டை | ஆதி | அம்புஜம் கிருஷ்ணா |
| பாட வேண்டுமே | ஹம்சநாதம் | ரூபகம் | எம்.எம்.தண்டபாணிதேசிகர் |
| பார்வதி நாயகனே | சண்முகப்பிரியா | ஆதி | பாபநாசம் சிவன் |
| எந்தவேடு | சரஸ்வதிமனோகரி | ஆதி | தியாகராஜர் |
| இராகம் தானம் பல்லவி | ஆபேரி | கண்டதிருபுடை | க.ப.சின்னராசா |
| தொட்டு தொட்டு | பெஹாக் | ஆதி | பெரியசாமி தூரன் |
| அழகொல்லை | இராகமாலிகை | கண்டசாபு | க.ப.சின்னராசா |
| கண்டேன் கண்டேன் | பாகேஸ்ரீ | ஆதி (திஸ்ரநடை) | அருணாசலக் கவிராயர் |
| தில்லானா | சுமநீசரஞ்சனி | ஆதி | தவமைந்தன் |
| திருப்புகழ் | சல்லாபம் | சந்ததாளம் | அருணகிரிநாதர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் வாழ்த்து
## "அரங்கேற்றம் பரவசமூட்டட்டும்"

எங்கள் மகாஜனக் கல்லூரியில் உயர்தர வகுப்பில், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று நல் மாணவனாக இருந்து சிறந்த பெறுபேற்றைப் பெற்ற தில்லைநாதன் அரன்றாஜ இன் மிருதங்க அரங்கேற்றம் நடைபெற இருப்பதையறிந்து பெருமகிழ்வடைந்தேன்.

தில்லைநாதன் அரன்றாஜ 2002ம் ஆண்டு தொடக்கம் மிருதங்கம் பயின்று வருகின்றார். வடஇலங்கை சங்கீதசபையினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தரம் ஐந்தில் சித்தியடைந்துள்ளார். மிருதங்கக் கலையை பயிற்றுவிப்பதில் சிறந்த கலைஞன் என்ற பாராட்டைப் பெற்ற உயர்திரு. சிங்கராசா செந்தூரன் அவர்கள் செல்வன் தி.அரன்றாஜ இன் குரு ஆவார். ஆதலால் அரங்கேற்றம் செய்வதற்குரிய தரம், தகுதி, பக்குவம், முதிர்ச்சி என்பன செல்வன் தி.அரன்றாஜிடம் இருக்குமென நம்புகிறேன்.

மாணவனின் பெற்றோரும் அவர்களது தாய், தந்தையும் நல்லொழுக்கமும், சிறந்த தமிழ், இந்து பண்பாட்டையும் உயர்வாகப் போற்றுபவர்கள் என்று ஊர்மக்கள் பாராட்டுவதை நானறிவேன். இந்த வகையில் செல்வன் தி.அரன்ராஜ் இன் பெற்றோர் மகனின் உள்ளார்ந்த ஆற்றலையும், திறனையும், ஆசையையும் கூர்மையாக அவதானித்து மகனின் அறிவை விருத்தி செய்ய விஞ்ஞானத்துறையைக் கற்பித்தனர். கலை அழகியல் உணர்வையும் விருத்தி செய்ய மிருதங்கக் கலையைக் கற்பித்தனர்.இத்தகைய புத்திக் கூர்மையுடைய பெற்றோரைப் பாராட்டுகின்றேன். தனது பிள்ளையை நல்ல பழக்கவழக்கத்தோடு வளர்க்க வேண்டும் என்பதில் அதிககவனம் செலுத்தி சிறுபராயம் தொடக்கம் வளர்த்த பெற்றோரை வாழ்த்துகின்றேன்.

செல்வன் தி.அரன்ராஜ் எங்கள் மகாஜனக் கல்லூரியில் கற்கின்ற காலத்தில் கல்வியில் சிறந்த மாணவனாக இருந்ததோடு இணைப்பாட விதான செயற்பாடுகளான கலைஇலக்கியம், மாணவர் மன்றம் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பரிசுகள் பெற்றுள்ளார். இத்தகுதிகளோடு மிருதங்கக் கலைத்திறனும் பெருமை சேர்க்கின்றது.

ஒரு கலையை படைக்கும் போது அல்லது கலையை அவைக்காற்றும் போது அந்தக் கலையில் இருந்து பல குரல்கள் ஒலிக்கும். இந்த ஒலியில் அழகியல் முக்கியமானது. அழகியல் ஒலியில் இரசனை இருக்கும். இலயிப்பு வரும். பரவசம் ஏற்படும். இதில் உன்னத மான பரவச நிலையை எல்லாக் கலைஞனும் ஏற்படுத்துவதில்லை. ஒரு சில குறிப்பிடத்தக்க கலைஞனாலே ஏற்படுத்தப்படுகின்றது அல்லது கலை படைக்கப்படும்போது எல்லாச் சந்தர்ப்பத்திலும் பரவசம் ஏற்படுவதில்லை. சில சந்தர்ப்பத்திலே பரவசம் ஏற்படுத்தப்படுகின்றது.

எங்கள் மாணவன் மகாஜனன் செல்வன் தில்லைநாதன் அரன்ராஜ் இன் அரங்கேற்றம் உயர்தரத்தில் நிகழ எனது நல் வாழ்த்துக்கள். பெற்றோருக்கு எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் மிருதங்கக் கலையையும் ஏனைய கலைகளையும் கற்று உச்சங்களைத் தொட, பரவசமூட்ட வாழ்வில் செழிப்புற்று மகிழ்வுடன் வாழ எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கு.வேல்சிவானந்தன்
அதிபர்,
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்த்துச் செய்தி

கலைகள் பிறந்து வளர்ந்த மண் இன்று அவற்றையெல்லாம் இழந்து நிற்கின்ற காலத்திலே அதனை மீண்டும் வளர்க்க வேண்டும் என்ற பேரவாவோடு செல்வன் தில்லைநாதன் அரன்றாஜ் இசைக்கலையின் முக்கிய ஊற்றாகத் திகழும் மிருதங்கக் கலையைப் பயின்று அரங்கேற்றம் செய்வது முக்கிய நிகழ்வாகும்.

இவர் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பாடத்தைக் கற்றபோதிலும் மிருதங்கக் கலையின் பால் தான் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக அக்கலையை தகுந்த குருவிடம் முறைப்படி பயின்று அரங்கேற்றம் செய்வது பாராட்டுக்குரியதாகும்.

இவருடைய இக்கலையார்வம் மென்மேலும் வளர்ச்சி பெற்று எதிர்காலத்தில் சிறந்த மிருதங்கக் கலை வித்துவானாகத் திகழ ஆசீர்வதிப்பதோடு பெற்றோருக்கும், தமிழ் சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.


நா.கேதீஸ்வரன்
அதிபர்,
யா/அருணோதயக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாட்டு

## இசைமாணி தவநாதன் றொபேட்



ஈழத்தமிழரின் செவ்வியல், நாட்டார் கலைகள் அனைத்திலும் ஆழக் காலபதித்திருக்கும் ஆற்றுகையாளரான திரு. தவநாதன் றொபேட் அவர்கள் இசையமைப்பாளராக, பாடகராக, கருவியாளராக, எழுத்தாளராக, ஆய்வாளராகத் திகழ்ந்து வருகின்ற விரிவுரையாளர் ஆவார்.

## வயலின்

## சுருதிவேந்தன் அ.ஜெயராமன்



கலைக் குடும்பத்தில் தோன்றிய சுருதிவேந்தன் அ.ஜெயராமன் அவர்கள் ஈழத்தின் ஒலிப்பதிவுத் துறையில் நீண்டகால அனுபவ முதிர்ச்சி கொண்டவராகவும் இசை, நடன, மிருதங்க அரங்கேற்றங்களிற்குரிய சிறந்த பக்கவாத்தியக் கலைஞராகவும் தனியான வயலின் இசையரங்குக் கலைஞராகவும் திகழ்ந்து வருகின்றார்.

## கடம்

## நாகரத்தினம் மாதவன்



கலாவித்தகர், நுண்கலைமாணி, முதுகலைமாணி, ஆய்வியல் நிறைஞர் பட்டங்களை மிருதங்கத் துறையில் பெற்றிருக்கும் நாகரத்தினம் மாதவன் அவர்கள் சங்கீரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். எண்ணற்ற ஆற்றுகைகளிலும் அரங்கேற்றங்களிலும் மிருதங்கம், கடம் போன்ற கருவிகளை நுட்பமாக கையாண்டு வரும் இவர் வளர்ந்து வரும் இளங் கலைஞர்களுள் அர்ப்பணிப்பு மிகுந்த கலைஞர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சிரா

## நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா



பொருளியல் பட்டதாரியான நாகேஸ்வரசர்மா சிவசுந்தரசர்மா அவர்கள் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவர் ஆவார். கலை, ஆன்மீகம், ஓவியம், கவிதை, கட்டுரை போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்ற இவர் திருவாரூர் பக்தவத்சலம் அவர்களிடமும் கற்றவர். இசை நிகழ்வுகளிலும் ஒலிப்பதிவுகளிலும் பல ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகின்ற இவர் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றார்.

## முகர்சிங்

## துரைசிங்கம் சுபேஸ்



கலாவித்தகர், நுண்கலைமாணி போன்ற பட்டங்களைப் பெற்றிருக்கும் துரைசிங்கம் சுபேஸ் அவர்கள் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்களன் மாணவராவார். மிருதங்கம், முகர்சிங் போன்ற கருவிகளை இசையரங்குகளில் வாசித்து வருகின்ற இவர் கிராம அலுவலராகவும் பணியாற்றி வருகின்றார்.

## தம்புரா

## கந்தசாமி ரஜீவன்



நுண்கலைமாணிப் பட்டம் பெற்றிருக்கும் கந்தசாமி ரஜீவன் அவர்கள் யாழ் மத்திய கல்லூரியில் இசை ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். அர்ப்பணிப்புடன் மாணவர்களை இசையாளர்களாக உருவாக்கி வருகின்ற இவர் கடந்த பல ஆண்டுகளாக இசைக் கலையில் ஈடுபட்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் .....

வேழமுகத்து விநாயகனின் பாதம் பணிந்து எமது தலைமகன் செல்வன் தி.அரன்ராஜ் அவர்களின் தண்ணுமை அரங்கேற்றம் சிறப்பாக நடைபெறுவதற்காக அல்லும் பகலும் அயராது முழுமூச்சுடன் பயிற்றுவித்த குரு கலாவித்தகர் திரு.சி.செந்தூரன் அவர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் எமது முதற்கண் நன்றிகள் உரித்தாகுக.

எமது மகனின் கலைப் பயணத்தைத் தொடக்கி வைத்த ஆசிரியர் திரு.சோ.சுந்தரேஸ்வரன் அவர்களுக்கும், கலைப்பயணத்தில் காத்திரமான பங்கை வழங்கி ஊக்குவித்த ஆரம்ப குரு நா.மாதவன் (எம்.பில்) அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

எமது அழைப்பையேற்று இந்நிகழ்வு சிறப்புற அமைய வழிவகுத்த அரங்கிசைக் கலைஞர்களுக்கும், விழாவின் தலைவர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், ஆசியுரை வழங்கியோர், மதிப்பீட்டுரை, வரவேற்புரை வழங்கியவர்களுக்கும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், இட ஒழுங்கு வழங்கிய கோயில் நிர்வாகத்தினருக்கும், ஒளி, ஒலி சேவை வழங்கியோருக்கும், மடல் அச்சிட்ட முத்து பிறின்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்.

அளவெட்டி.

திரு.திருமதி தில்லைநாதன்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம்.